# கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் (திணைக்களம்), தரம் III பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு – 2018

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் (திணைக்களம்), தரம் III பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட முறையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய கிழக்கு மாகாண சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், விசேட தரம் அல்லது கிழக்கு மாகாண ஆய்வு உத்தியோகத்தர், விசேட தரத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி 2019.01.11 ஆகும்.

**02. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்**

2.1. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப்பரீட்சைக்குழுவினால் நடாத்தப்படும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2.3 இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும். இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

2.4 மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்கு கிழக்கு மாகாண சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், விசேட தரம் அல்லது கிழக்கு மாகாண ஆய்வு உத்தியோகத்தர், விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும் போது தங்களது விண்ணப்பப்பத்திரங்களை தமது திணைக்களத்தலைவரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு திணைக்களத்தலைவரினால் சிபாரிசு செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**03. சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை 03/2015 ற்கு அமைவாக. (SL-1-2016)
ரூபா. 47,615 – 10 x 1,335 – 8 x 1,630 – 17 x 2,170 – ரூபா. 110,895/-

01.01.2016 ஆந் திகதியிலிருந்து வழங்கப்படும் சம்பளம் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை II இன் பிரகாரம் வழங்கப்படும். மேலும் 01.01.2020 முதல் முழுமையான சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

**04. பொதுவான தகைமைகள் :**

விண்ணப்பதாரிகள் மேலே குறிப்பிட்ட பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**05. ஆட்சேர்ப்பு முறை :**

5.1. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் விண்ணப்பதாரிகள் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும்.

5.2. கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடத்தின் அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

5.3. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**06. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்கு முன்னரோ கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போதோ அல்லது கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும்

அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம். மேலே 5.3 பந்தியில் கூறப்பட்ட விடயங்களை விண்ணப்பதாரிகள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**07. விண்ணப்பிக்கும் முறை :**

7.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 8.0 வரை முதலாம் பக்கத்திலும், இல. 9.0 தொடக்கம் 12.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

7.2. **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.3. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/18/10** என்பதை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

7.4. விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

7.5. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019 ஜனவரி மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

**08.** விண்ணப்பதாரியின் ஆளடையாளத்தை நிரூபிப்பதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்.

i. தேசிய அடையாள அட்டை ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்)
iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

**09.** கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெறும்.

- **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் மற்றும் கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் விதம் பின்வருமாறு.**

i. **வயதெல்லை :**

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் போது வயதெல்லை ஏற்புடையதல்ல.

ii. **கல்வித்தகைமை :**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வழங்கப்படும் பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

iii. **தகைமை :**

(அ) கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் கீழ் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், விசேட தரம் அல்லது ஆய்வு உத்தியோகத்தர், விசேட தரத்தில் உள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் மேற்குறிப்பிட்ட விசேட தரத்திலுள்ள சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் மூன்று (03) வருடத்திற்கு குறையாத திருப்திகரமானதுமான சேவைக்காலத்தை கொண்டிருப்பதோடு ஒழுக்காற்று நடவடிக்கைகளில் ஈடுபடாதவராகவும் இருத்தல் வேண்டும்.

iv. **கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படும் விதம் பின்வருமாறு.**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்** | **உச்ச புள்ளிகள்** |
|---|---|
| 01. **சேவை மூப்பு :**<br>(i) சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது ஆய்வு உத்தியோகத்தர் சேவைச் சேர்ந்த விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் ஐந்து (05) வருடத்தை விடக்கூடிய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருப்பின் பூரணப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு ஆண்டிற்குமாக நான்கு (04) புள்ளிகள் வழங்கப்படும்.<br>(ii) சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது ஆய்வு உத்தியோகத்தர் சேவைச் சேர்ந்த விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஐந்து (05) வருடம் சேவையாற்றிய பின் மேலதிகமாக சேவையாற்றிய ஒன்பது (09) மாதத்திற்கு குறையாததும் (01) வருடத்திற்கு மேற்படாதுமுள்ள காலப் பகுதிக்கு மூன்று (03) புள்ளிகள் வழங்கப்படும்.<br>(iii) சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது ஆய்வு உத்தியோகத்தர் சேவைச் சேர்ந்த விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஐந்து (05) வருடம் சேவையாற்றிய பின் மேலதிகமாக சேவையாற்றிய ஆறு (06) மாதத்திற்கு குறையாததும் ஒன்பது (09) மாதத்திற்கு மேற்படாதுமுள்ள சேவைக்காலத்திற்கு இரண்டு (02) புள்ளிகள் வழங்கப்படும்.<br>(iv) சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது ஆய்வு உத்தியோகத்தர் சேவைச் சேர்ந்த விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஐந்து (05) வருடம் சேவையாற்றிய பின் மேலதிகமாக சேவையாற்றிய மூன்று (03) மாதத்திற்கு குறையாததும் ஆறு (06) மாதத்திற்கு மேற்படாதுமுள்ள சேவைக்காலத்திற்கு ஒரு (01) புள்ளி வழங்கப்படும்.<br>(v) விசேட தரத்தில் ஐந்து (05) வருடங்கள் பூர்த்தியானதன் பின்னரான மூன்று (03) மாதங்களுக்கு குறைவான சேவைக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது. | 40 |
| 02. **அனுபவம் :**<br>(i) பதில் கடமை அடிப்படையில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவியில் சேவையாற்றிய ஒவ்வொரு பூர்த்தி செய்யப்பட்ட ஆண்டிற்கும் விசேட தரத்தைச் சேர்ந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது ஆய்வு உத்தியோகத்தர் சேவைச் சேர்ந்த உத்தியோகத்தருக்கு மூன்று (03) புள்ளிகள் வழங்கப்படும்.<br>(ii) பதில் கடமை அடிப்படையில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவியில் சேவையாற்றிய ஆறு (06) மாதத்திற்கு குறையாததும் (01) வருடத்திற்கு மேற்படாதுள்ள காலத்திற்கு விசேட தரத்தைச் சேர்ந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது ஆய்வு உத்தியோகத்தர் சேவைச் சேர்ந்த உத்தியோகத்தருக்கு இரண்டு (02) புள்ளிகள் வழங்கப்படும்.<br>(iii) பதில் கடமை அடிப்படையில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவியில் மூன்று (03) மாதத்திற்கு குறையாததும் ஆறு (06) மாதத்திற்கு மேற்படாதுள்ள சேவைக்காலத்திற்கு விசேட தரத்தைச் சேர்ந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அல்லது ஆய்வு உத்தியோகத்தர் சேவைச் சேர்ந்த உத்தியோகத்தருக்கு ஒரு (01) புள்ளி வழங்கப்படும்.<br>(iv) பதில் கடமை அடிப்படையில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவியில் மூன்று (03) மாதங்களுக்கு குறைவான சேவைக் காலத்தை கொண்டுள்ள அலுவலர்களுக்கு புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது. | 15 |
| 03. **மேலதிக கல்வித்தகைமைகள் :**<br>(i) கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட பட்டப்பின் பட்டத்திற்கு பத்து (10) புள்ளிகளும் ஒரு வருட டிப்ளோமாவுக்கு நான்கு (05) புள்ளிகள் வழங்கப்படும்<br>(ii) பதவியின் மேம்பாட்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட ஒவ்வொரு டிப்ளோமாவுக்காகவும் ஒரு (01) புள்ளி வழங்கப்படும். இது ஐந்து (05) புள்ளிகளுக்கு மட்டுப்படுத்தப்படும். | 20 |
| 04. **ஏனைய தகைமைகள் :**<br>ஒவ்வொரு ஒரு வாரத்திற்கான வெளிநாட்டு பயிற்சி / தேசிய மாநாடு / பயிற்சி முகாம் / கல்விச் சுற்றுலா / ஆய்வு / திட்ட முன்மொழிவுகளுக்காக இரண்டு (02) புள்ளிகள் வழங்கப்படும். | 20 |
| 05. நேர்முகப் பரீட்சையின்பேது வெளிப்படுத்தப்படும் திறமை | 05 |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** |

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன், இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தினை நிரப்புவது சம்பந்தமான முடிவு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் / கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பேரில், நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**எம்.வை.சலீம்,**
செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம், திருகோணமலை.

**EX/Rec/18/10**

(அலுவலக உபயோகத்திற்கு)

**மாதிரி விண்ணப்பபடிவம்**

**கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தின்**
**உதவி உள்ளூராட்சி ஆணையாளர் (திணைக்களம்), தரம் III பதவிக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு – 2018**

***மொழிமூலம் :***
தமிழ் - **T,** சிங்களம் - **S**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்) ☐

**நிரந்தர வதிவிட மாவட்டம் :** …………………………………………………………………………………………………..

1.0. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: Mr./Mrs./Miss./ ……………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : PERERA, A.B.C) …………………………………………...

1.2. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ………………………………………………………………..

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………………...

1.4. பால் : (பெண் - F / ஆண் - M)
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்) ☐

1.5. தொலைபேசி இல. : ……………………………………………………………………….....................

2.0. 2.1. நிரந்தர முகவரி : ……………………………………………………………………….........................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ………………………………………………………………………………………....
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ………………………………………………………..
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. நீங்கள் இலங்கை பிரஜையாயின், தேசிய அடையாள அட்டை இல.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2019.01.11 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0. இனம் : சிங்களவர் ☐ இலங்கைத்தமிழர் ☐ முஸ்லிம் ☐ வேறு ☐
(உரிய கூட்டினுள் ✓ இடவும்)

5.0. கல்வித்தகைமைகள் :

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/நிறுவனம் ஒன்றில் பட்டம்/டிப்ளோமாவை பெற்றிருப்பின்,

I. பல்கலைக்கழகத்தின்/நிறுவனத்தின் பெயர் : ……………………………………………………………..

II. பட்டம்/டிப்ளோமா (வகுப்பு இருப்பின் குறிப்பிடவும்) : ………………………………………….......

III. பட்டம்/டிப்ளோமா பெற்ற திகதி:…………………………………………………………………….........

6.0. சேவை மூப்பு : ………………………………………………………………………………......................
………………………………………………………………………………………………………………

7.0. அனுபவம் : ……………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………

8.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?
அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. …………………………………………………………….......
………………………………………………………………………………………………………………

9.0. **கிழக்கு மாகாண சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் / ஆய்வு உத்தியோகத்தர் சேவையை சேர்ந்தவராயின்,**

9.1. தற்போதைய பதவி : ……………..……………………………………………………………………………...

9.2. தற்போதைய தரம் : ……………..…………………………………………………………………………...

9.3. அலுவலகம் : ……………………………………………………………………………….............................

9.4. முதல் நியமனத் திகதி : …………………

9.5. தற்போதைய தரத்தின் சேவைக்காலம் : …………………….

9.6. முழு சேவைக்காலம் : ………….

10.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

…………………………………....
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………

11.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 7.4 இன்படி)

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி ……………………………….. என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….
பதவி :………………………………………………………….
முகவரி :……………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

12.0 **திணைக்களத்தலைவரின் உறுதியுரை :**

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ________________________ இத்திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும், அவர் நிரந்தரமான பதவியொன்றினை வகிக்கின்றாரெனவும், 2019.01.11 ஆந் திகதியன்று அவர் கிழக்கு மாகாண ________________________ சேவையின் விசேட தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளார் எனவும், விசேட தரத்திற்கு பதவியுயர்வுக்கான கடிதம் இவருக்கு வழங்கப்பட்டுள்ளதென்றும், அவர் 2019.01.11 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் 03 ஆண்டுகள் தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ளாரெனவும், 2019.01.11 ஆந் திகதிக்கு உடன் முன்னரான 03 ஆண்டு காலத்தில் அவரது வேலையும் ஒழுக்கமும் திருப்திகரமாக இருந்ததெனவும், இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும், அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இத்திணைக்களத்தில் உள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளனவெனவும் இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை சம்பந்தமான அறிவித்தலில் காணப்படும் ஒழுங்கு விதிகளுக்கிணங்க இக்கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..………………………………………
திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி :……………………
முழுப் பெயர் :…………………………………………….
பதவி :………………………………………………….
முகவரி :……………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)